செ.வெ.எண்.51 நாள்: 20.09.2017

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மக்களின் நலன் கருதி அற்புதமான “அம்மா திட்டம்” **(AMMA – Assured Maximum Service to Marginal People in All Villages)** என்ற திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்கு பயணம் செய்து நீண்ட நேரம் காத்திருந்து மனுக்களை அளிப்பதால் ஏற்படும் நேரம், செலவு மற்றும் பல்வேறு இன்னல்களை போக்குகின்ற வகையில் மக்கள் வசிக்கும் கிராமத்திற்கே வருவாய்த்துறை அலுவலர்கள் சென்று குறைகளை கேட்கும் வகையில் **“அம்மா திட்டம்”** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், வாரம் ஒரு கிராமத்தில் **வெள்ளிக்கிழமை** அன்று வருவாய்த்துறை சார்பில் முகாமிட்டு, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து துறையைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்கும் வகையில் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு வருவாய் வட்டத்தில் மக்களைத் தேடி வருவாய்த்துறை மூலம் **“அம்மா திட்டம்”** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வரும் வெள்ளிகிழமை **22.09.2017** அன்று கீழ்கண்ட வட்டங்களில் எதிரே குறிப்பிட்டுள்ள குறுவட்டத்தில் அடங்கியுள்ள வருவாய் கிராமங்களில் **“அம்மா திட்ட முகாம்”** நடைபெற தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| **வரிசை எண்** | **வட்டம்** | **குறுவட்டம்** | **வருவாய்கிராமம்** |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | நாராணம்மாள்புரம் | கரையிருப்பு |
| 2. | இராதாபுரம் | திசையன்விளை | உறுமன்குளம் |
| 3. | அம்பாசமுத்திரம் | அம்பாசமுத்திரம் | சிவந்திபுரம்<br>ஈசானமடம்<br>ஏகாம்பரபுரம் |
| 4. | நான்குநேரி | பூலம் | ஆழ்வானேரி |
| 5. | சேரன்மகாதேவி | சேரன்மகாதேவி | கூனியூர் |
| 6. | பாளையங்கோட்டை | மேலப்பாட்டம் | பாறைக்குளம் |
| 7. | மானூர் | மானூர் | துலுக்கர்பட்டி |
| 8. | சங்கரன்கோவில் | சேர்ந்தமங்கலம் | நடுவக்குறிச்சி(மேஜர்) |
| 9. | திருவேங்கடம் | கரிசல்குளம் | சத்திரப்பட்டி |
| 10. | வீரகேரளம்புதூர் | வீரகேரளம்புதூர் | வீரகேரளம்புதூர் |
| 11. | ஆலங்குளம் | கீழப்பாவூர் | பூலாங்குளம் |
| 12. | சிவகிரி | கூடலூர் | தென்மலை-2 |

| | | | |
|---|---|---|---|
| 13. | கடையநல்லூர் | கடையநல்லூர் | கம்பனேரிபுதுக்குடி -2 |

மேற்கண்ட கிராமங்களில் **22.09.2017** அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை நடைபெறவுள்ள "அம்மா திட்டத்தின்" போது பொது மக்கள் கீழ்க்கண்ட தங்களது **கோரிக்கைகள் தொடர்பாக மனுக்களை அளிக்கலாம்.** இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், **2.** முதியோர் உதவித்தொகை உள்பட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், **3.** பட்டா மாறுதல்கள், **4.** உழவர் பாதுகாப்பு அட்டைகள், **5.** பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், **6.** சாதி சான்றிதழ்கள், **7.** இருப்பிட சான்றிதழ்கள், **8.** வருமான சான்றிதழ்கள், **9.** நிலத்தாவாக்கள் **10.** குடும்ப அட்டை,**11.** சாலை வசதிகள் மற்றும் குடிநீர் வசதி போன்றவைகள் தங்களது கிராமத்திற்கு கிடைத்திடும் **வகையில்,** வருவாய்த்துறை மக்களுக்கு ஆற்றி வரும் சேவையை துரிதப்படுத்தப்பட்டு மக்கள் பயனடைய இதன் மூலம் வழிவகை செய்யப்படுகிறது. எனவே, பொதுமக்கள் இம்முகாமில் தகுந்த ஆவணங்களுடன் **தங்கள் கோரிக்கை குறித்த மனுக்களை முகாமில் ஆஜராகி நேரில் அளித்து** பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி